# ஜீலை 19 - புனித விக்டர்

இவர் பாப்பு ஆனதும் இத்தாலிய நாட்டின் ஆயர்களுக்காக ஒரு சங்கத்தைக் கூட்டினார். இதைப்போன்ற சங்கங்களை இராச்சியத்தின் பல இடங்களிலும் கூட்டி, கர்த்தர் உயிர்த்த விழா எப்பொழுது கொண்டாட வேண்டும் என்று தீர்மானிக்கச் சொன்னார். ஆசியாவிலுள்ள ஆயர்கள் உரோமை வழக்கத்தைப் பின்பற்றவில்லை. அவர்களை திருச்சபையைவிட்டு வெளியேற்றப் போவதாக இவர் பயமுறுத்தினார். புனித இரனேயுஸ் பாப்பானவரை அணுகி அவ்விதம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். அடுத்த நூற்றாண்டிலே அகில உலகுமே உரோமை வழக்கத்தைப் பின்பற்றத் தொடங்கியது.




**சிந்தனை:**

நமது உள்ளங்களிலும், இல்லங்களிலும் சமூகத்திலும் அமைதியைக் காக்கும்படி பரித்தியாகங்கள் செய்ய நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, திருச்சபைக்கு அமைதியைத் தாரும்.